

# திறவுகோல்

2057 | ஆனி

மாத இதழ்

வெளியீடு:
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# மழையே வா வா

நெபுலாக்களின் சிதறல்கள்
கண்டங்கள் ஆனதால்
ஐம்பூத சேவையில்
அற்புதம் நிகழ்ந்தது
பூமி பூப்பெய்தி
புது உலகம் பிறந்தது
உயிர்கள் இல்லா பூமியில்
இயற்கை விழித்தது

பசுமை பூத்தது உயிர்கள் பிழைத்தது
வானினி ஈகையால் வளமை செழித்தது
படைப்புலகம் பரிமாணம் பெற்றது
மழையின் வருகையால் உயிர்கள்
சிரித்தது

ஆறு குளம் ஏரி கடல் என
மழை அலங்கரித்தது
சூழலை தனதாக்கி புத்தனாகியது
வையத்தை வாழ்விக்கும் அச்சாணி
ஆனது
மழைக்கும் ஒரவஞ்சனை தான்
சிரபுஞ்சியில் சிரிக்கிறது சகாராவில்
அழுகிறது
படைப்பின் வினோதமல்லவா?

தான் பொழிந்த நீரே சுழற்சியில்
பல உருவம் எடுக்கிறது.
வானம் பெருவெளியில்
விளையாடி பார்க்கிறது.

கண்ணாடி பூக்களாய் மண் மீது
மலர்கிறது

இனிய சோலைகளும் இன்பமான
வனங்களும்
சிறு புல்லும் செரு மரமும் மழையே உன்
வடிகாலே.

தடி ஊன்றி நடப்போரும் தரையில்
முதல் அடி வைப்பவரும் உனது
காதலர்கள்
உன்னை பாடாத கவிஞர்கள் உண்டோ?
உன்னில் வாராத அழகியல் நன்றோ ?

மழை வேண்டி யாகங்கள் தவிர்த்து
மரங்கள் நட நீ வருவாய்.
பூமி சுவைக்கும் நீர் புதியன பிறக்கும்
நாளாகும்
பருவ காலம் மாற்றும் பூண் ஆகும்

பூமியில் உழலும் நீயும் காலங்கள்
பல கோடி ஆனாலும்
புதுமையாய் இருப்பது படைப்பின்
உன்னதம் தான்
மழைக்காலம் வரும்போது வையம்
பூரிக்கிறது
நீ வர மறுக்கும் போது தன் நிலை
மாறுகிறது.

கார்மேகம் அதிகமாய் கரையும் போது
காடு கழனி மறைந்து போகும்
நாடும் வீடும் நலிந்து போகும்
எத்தனை தான் துன்பம் தந்தாலும்
மழையே நீ வா வா வா...

- வின்மீண்,
சென்னை.
கைப்பேசி: 9087474583

# 15 கிலோ மீட்டர்களும் எட்டு வளைவுகளும்

15 கிலோ மீட்டர்களும்
எட்டு வளைவுகளும்
என்ன செய்து விட முடியும்
அழுகை கூட்டுமோ
துயரம் சேர்க்குமோ
துக்கத்தில் ஊஞ்சல் கட்டி
கண்ணீரில் தாலாட்டுமோ
மேகமென நினைவுகளில்
வருகிற என்னை
வானமென பார்வையில்
படுகிற என்னை
நீயே அறிவாய்
உன் இமைகளின் மேல்
என் இதயம் படும்படிதான்
இவ்வாழ்வு
எல்லாம் சரி
காதலின் மொழி
கசிந்துருகுதல் என்றும்
அறிவாயோ என்றுதானே
கேட்கிறாய்
பிரிவுத் துயர் காற்றுக்கு மட்டுமா
புல்லாங்குழலுக்கும்தான்
இசைக்க மறந்த அன்றும்
ராகத்தின் விசும்பலைத்தான்
தூதனுப்புகிறேன்
உன் ஊர் தொடுவானத்திலேறும்
தோகை மயிலென என்னை
நீ நம்பாமல்
இருக்க போவதில்லை
நானும் இப்படியாகவே
நீ காணும் நிலவை இங்கே
கட்டி இழுத்துக் கொண்டிருக்கிறேன்
விழியில் பெருவெளித் துயரம்
காதலின் மொழி என்று
அறிவேனடி தோழி

## நெற்றி முற்றிய நினைப்பு

சிந்தனையில் சுயம் கூடி
சுட்டு விட்டனவோ
களைந்த தியானத்தில்
காதலை வெட்டி விட்டாய்
மௌனம் சூழ் தாழ் விழிகள்
குத்தி விட்டனவோ
மர்ம முடிச்சை
மனதுக்கு போட்டுக்கொண்டாய்
எனைச் சுற்றிச் சுற்றி கிறுகிறுத்த
உண்மை சுட்டு விட்டனவோ
இதயம் தட்டி விட்டு
நகர்ந்து கொண்டாய்
சுயம் அறுத்ததோ
சுகம் வெறுத்ததோ
கனம் ஏறிய கவிதையின்
சுமை தாங்க மறுத்ததோ
என்ன சொன்னாலும்
சிறுபிள்ளை சிரிப்பு வரும்
ஒன்றும் சொல்லா நாளில்
கொம்பு பூண்டதென்ன
மனதறுத்து பறக்கும் அளவுக்கு
எந்த வானம் அழைத்தது
மரத்திலிருக்கையில்
உடன் இருந்த சிறகே
வானமேறியதும் கைவிட்டது ஏன்
வற்றிய காதல் குளத்தில் நின்று

கத்துகிறேன்
நெற்றி முற்றிய நினைப்பை
என்ன செய்வாய்..!

## மதில் தோகை

நான் மனமேறி விடுவதைப் போல
அது மரமேறி விடுகிறது
மொழித் தாவல் என்னுடையது
வழித் தாவல் அதனுடையது
உணர்வை எழுதிப்பார்ப்பேன் நான்
உலகைத் தாவிப் பார்க்கும் அது
தவம் என்பது சிந்தனை எனக்கு
வேடிக்கை பார்ப்பதே தவம்தான் அதற்கு
தூக்கத்திலும் விழிப்பு எனக்கு
தூங்கினால்தான் விழிப்பு அதற்கு
என் மொழி புரிகிறது போல
அதன் மொழியில் அத்தனை முழுமை
மியாவ் என கத்திப் பார்க்கும் என்னை
என்னைப் போல எட்டிப் பார்க்கும்
பூனை
நெருங்கிக் காண
நான் தரையிறங்க வேண்டும்
அதற்கோ தாவி ஏறி
மதில் தோகை அசைக்க வேண்டும்.

— கவிஜி

---

## சுவடும் சுவடியும்

டமாரம் அடித்து
அறிவிப்பு செய்வது
இப்போதும் உண்டு
முத்தாரம்மன் பொங்கலுக்கு ஒன்று
முனியம்மன் பொங்கலுக்கு ஒன்று
என வருடம் இருமுறை

தமுக்கை அடித்துவிட்டு
'இதனால் ஊர் மக்களுக்கு
அறிவிப்பது என்னெவென்றால்
என்று தொடங்கி
அறிவிப்பை நிறைவு செய்துவிட்டு
மீண்டும் தமுக்கை அடிப்பார்

முத்தாரம்மனையும்
முனியம்மனையும்
துரைமடத்து பிள்ளையார்
கோயிலில்தான்
கரைப்பார்கள்

எட்டுமாதத்தில்
எட்டெடுத்து வைக்கவில்லை
ஒன்றரை வயதாகியும்
நடக்கவில்லை
என்று தாத்தா
முத்தாரம்மனையும்
முனியம்மனையும்
கரைத்த மண்ணை
எடுத்து வந்து
கால்களில் பூசி
என்னை
நடக்க வைத்த கதையை
பாட்டி சொல்வாள்

மண்ணும் மரபும்
சுவடுதான்
எண்ணும் எழுத்தும்
அறியவில்லை என்றாலும் கூட
அம்மம்மா ஒரு
அரிச்சுவடிதான்.

—

மு. ஆறுமுகவிக்னேஷ்,
சத்திரப்பட்டி - 626102

---

# குற்றலச் சாரலது கண்ணோரம் ஊறிவர

சிற்றிடை அசைவினில்
சிதறியது உள்ளம்

கள்ளச் சிரிப்பினில்
கனிவானேன் கண்ணே

விழிகள் விரிந்திட
வியப்பானேன் நானே

இதழோரச் சிவப்பே
இதயத்தில் உவப்பே

குற்றாலச் சாரலது
கண்ணோரம் ஊறிவர

குளுமையில் குளிர்ந்தே
குமரியிடம் வசமானேன்

வர்ணனைக்குள் அடங்கிடாத
வஞ்சியும் நீதானே

மயக்கும் பார்வையால்
மனதைக் கவர்ந்தாயே



எண்ணமது சுழன்றிட
ஏகாந்தமது மறைந்ததே

ஈர்த்திட்டாய் என்னையே
ஈசலாய் சுற்றுகிறேனே

அருகினில் வந்திடவே
ஆசையது மீறுகிறதே

நளினமான நங்கையே
நாணத்தில் வீழ்ந்தாயோ

நங்கூரமதைப் பாய்த்து
நெஞ்சமதில் நிலைத்தாயே

உணர்வுகள் எழுகிறதே
உறவாகிக் கலந்திடு

உரியவள் என்றாகியே
உரிமையைத் தந்திடு

சஞ்சலமதைப் போக்கியே
சகியாய் ஆகிவிடு

- பெ. வெங்கட லட்சுமி காந்தன்,
விருதுநகர்.

# வெளுத்தாச்சு கிழக்கு...

இப்படியும் நடக்குமா என தருண் கோபத்தில் கொதித்துப் போனார். பண்ணை அடிமை முறை ஒழிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டாலும் இன்னும் இந்த கிராமத்தில் அது தொடர்ந்து வருவதைக் கண்டு அதிர்ச்சியுற்றார்.

தருண் சோலையூர் ஆரம்பப் பள்ளிக்கு தலைமை ஆசிரியராக பணி மாறுதலில் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு தான் வந்து சேர்ந்தார். வகுப்புக்கு ஐந்திலிருந்து பத்து பேர் என மொத்தமே 50 பேருக்குள் இருக்கும் அப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் எல்லோருமே வறுமையான குடும்பச் சூழலில் இருந்து வருகின்றனர். வீட்டுக்கு வீடு வாசலுக்கு வாசல் மஞ்சள் பேருந்துகள் மேல்தட்டு மாணவர்களை ஏற்றிக் கொண்டு போனது போக விவசாயக் கூலிகளின் பிள்ளைகளே உள்ளூர் பள்ளியை எட்டிப் பார்க்கின்றனர்.

அப்படி ஒரு பண்ணை அடிமை வேலை செய்யும் வேலனின் மகன் கார்த்தி ஐந்தாம் வகுப்பு படித்து வருகிறான். ஆண்டு இறுதித் தேர்வு எழுத அவன் பள்ளிக்கு வராத காரணத்தினால் அவனைத் தேடி வீட்டுக்கு போன தருணுக்கு அதிர்ச்சியே காத்திருந்தது. கார்த்தி தனது தந்தையுடன் சேர்ந்து பண்ணை வேலைக்கு சென்று கொண்டிருந்தான்.. நேரடியாக பண்ணையாரை சந்தித்து இது பற்றி கேட்கப் போனார் தருண்.

"அவனோட அம்மாவுக்கு மருத்துவமனை செலவுக்கு அவங்க அப்பா வாங்கிய பணமே நிறைய சேர்ந்துடுச்சு. அந்த கடனை யார் அடைகிறது? வேலன் எவ்வளவு சிரமப்பட்டு வேலை செஞ்சாலும் அவனுடைய ஆயுசுக்கும் அந்த கடனை அடைக்க முடியாது. அதுக்காகத்தான் அவனோட மகனையும் என்னோட பண்ணையில் சேர்த்துக்கிட்டேன். இது இந்த ஊர்ல வழக்கமா நடக்கிறது தானே. இதப் போயி கேள்வி கேட்க வந்துட்டீங்க" என மிரட்டல் தொணியில் பண்ணையார் பேசப் பேச தருணுக்குள் நிறைய சிந்தனைகள் தோன்ற ஆரம்பித்தன.

"ஐயா பண்ணை அடிமை முறை ஒழிக்கப்பட்டு குழந்தைகளை வேலைக்கு சேர்த்துக்கிட்டா உங்களுக்கு தான் கஷ்டம். போலீஸ் கேஸ் ஆயிருச்சுன்னா நீங்க வெளியிலேயே வர முடியாது. அப்படிங்கிறது உங்களுக்கு தெரியும் தானே" என்று தருண் கொடுத்து விளக்கத்தை பண்ணையார் கண்டுகொள்ளவே இல்லை. தருணும் இந்த பிரச்சினையை வேறு விதமாக அணுக வேண்டும் என பள்ளி திரும்பினார்.

நாட்கள் கடந்து சில மாதங்களுக்குப் பிறகு ஊருக்குள் ஒரே பரபரப்பு. காணும் இடமெங்கும் காவல் தலைகளும் அதிகாரிகளும் ஓடிக் கொண்டிருந்தனர். பண்ணையார்

வீட்டிற்கு மாவட்ட ஆட்சியரே ஆய்வுக்கு வருவதாகச் செய்திகள் பரபரத்தன. சிறிது நேரத்தில் ஆட்சியரே நேரில் வந்து ஆய்வு செய்தார். கார்த்தி உட்பட நான்கு சிறுவர்களும் ஐந்து சிறுமிகளும் பண்ணை வேலை செய்து வந்ததைக் கண்டுபிடித்து அவர்களை மீட்டெடுத்து தலை நகரில் உள்ள பள்ளிக்கு அனுப்பி வைத்தார் ஆட்சியர்.

பண்ணையாரையும் அவரது எடுபிடிகளையும் கைது செய்தனர். ஊரே கலவரப்பட்டுக் கிடக்க அங்கு வந்த ஆசிரியரைப் பார்த்து பண்ணையார் "எல்லாம் உங்க வேலை தானே இருக்கட்டும் நான் வெளியே வந்து உங்களை ஒரு வழி பண்றேன்" என்று வெறியோடு புலம்பினார். ஆட்சியருக்கு தான் தெரியும் இது தருணின் வேலை இல்லை என்பது.

தொடர்ச்சியான அலைச்சல்களுக்குப் பிறகு பண்ணையாருக்கு பிணையம் கிடைத்து வெளியில் வந்தார் அதற்கே அவர் தனது சொத்தில் பாதிக்கும் மேல் செலவு செய்ய வேண்டியதாகி விட்டது. அவருக்கு பிணயம் வாங்க அலைந்த வழக்குரைஞர் சொன்ன தகவலைக் கேட்டு அவர் நிலை குலைந்து போனார்.

"பாடப்புத்தகத்தில் உள்ள பாதுகாப்பு நம்பருக்கு அந்தப் பையன் கார்த்தியே நேரடியா கூப்புட்டு தனது நிலையை சொல்லி இருக்கான். அது மட்டும் இல்லாம இலவச உதவி நம்பர் மூலம் ஆட்சித்தலைவர் கிட்டையே பேசி இருக்கிறான். அதனால் தான் அவரே நேரில் வந்து இதைக் கண்டுபிடிச்சாரு. இனிமேலாவது உழைக்கும் மக்கள்கிட்ட மனிதாபிமானத்தோடு நடந்துக்குங்க. அவங்களுக்கு எழுதப் படிக்க தெரியாது அப்படின்னு நீங்க நினைச்சா உங்க ஆதிக்கத்தை கேள்வி கேட்க ஆரம்பிக்கிறதுக்கு அடுத்த தலைமுறை ரெடியா இருக்கு. நேரடியா அரசாங்கத்தையே கூட்டிட்டு வர்றதுக்கு அவங்க தயங்க மாட்டாங்க. அதனால வேலைக்கு ஏத்த சம்பளத்தை கொடுங்க. குழந்தைகளை வேலைக்கு வச்சுக்காதீங்க. ஊர்ல இருக்கிற பள்ளிக் கூடத்துக்கு முடிஞ்ச உதவிகளை செய்ய அரசாங்கத்தோட திட்டங்களை எல்லோருக்கும் கொண்டுவர்ரதுக்கு உதவி செய்யுங்க. இதுதான் இத்தனை ஆண்டுகளாக நீங்க செஞ்ச பாவத்துக்கு மன்னிப்பு கொடுத்து உங்களை வாழ வைக்கும்" என்ற வழக்குரைஞர் பேச்சைக் கேட்ட பணையாருக்குள் தனது தவறுகள் எட்டிப் பார்த்து ஏளனம் செய்யத் தொடங்கின.

—

இளையவன் சிவா,

கைபேசி: 9965359130



# கோடை மழை

நாள்தோறும்
வெய்யிலைக் கக்கிய
கதிரவனுக்கு
சிறிது ஓய்வு கொடுத்தது
மழை

கொதித்த உடலின் மேல்
ஒத்தடம் கொடுக்கிறது
மேகப்பஞ்சு

வெண்மையை வெறுத்து
கருமையை ரசிக்கும்
மனித மனங்களில்
எட்டிப் பார்க்கவில்லை
இங்கு மட்டும்
தீண்டாமை

இரசிக்கும் மனிதனின்
தலையில் விழுகிறது
வானத்தின்
ஆயிரம் கொட்டுகள்

ஊர் முழுக்க
எல்லோரும் நனைகிறார்கள்
மழையின் இசையில்

சில மாதம்
பார்க்காத உறவை
சன்னலின் வழியே
ஆசையாகப் பார்க்கும்
மனிதர்களின் கன்னங்களில்
மழை தருகிறது



பறக்கும் முத்தங்கள்

ஒற்றைத் தூரிகையால்
ஏழு வண்ணங்களை
வானில் வரைகிறது
சூரியக் கதிர்கள்

தான்
சுவற்றில் கிறுக்கிய கிறுக்கல்
வானில் தெரிவதாய்
இரசிக்கும் குழந்தை

நானோ எழுதுகிறேன்
வானின் தோளில்
ஏழு வண்ணத் துண்டு
ஓ... இது தேர்தல் காலம்

சிறிதோ...
அதீதோ...
எதுவாயினும்
ஏமாற்றாமல்
முடிந்ததைக் கொடுக்கும்
அரசியல்வாதி அன்று...
வள்ளுவர் குறிப்பிட்ட
வானமிது!

—

*சா. கா. பாரதி ராஜா,*
*மனை எண்: 1, ஹரிஹரன் நகர்,*
*வசந்தம் நகர் (உட்புறம்),*
*திம்மாவரம்,*
*செங்கல்பட்டு - 603101.*
*பேச - 9944315732*

# செடியில் பூத்த நட்சத்திரம்

இருளில் பூத்து
ஒளிரும்
மல்லிகைப் பூக்கள்
வானத்தைப்
பரிசளிக்கின்றன
மணக்கும்
நட்சத்திரங்களோடு!

வெயிலோடும் விளையாடி
வெயிலையும்
விளையாட்டில்
சேர்த்துக்கொண்டே
ஆட்டம் போடுகிறார்கள்
குழந்தைகள்!

சுடவில்லை
கோடை
நிலவொளி!

- நேசன் மகதி

---

# மென்துயர்

அன்பென்பது பாதுகாப்பல்ல,
அது நம்பிக்கையுடன் ஏற்றுக்
கொள்ளப்பட்ட
ஒரு மென்துயர்!

ஒருவர் மீதான
நம்பிக்கை என்பது
தெரியாத இருளில்
ஒருதுளி அன்பின் ஒளியில்
அடியெடுத்து வைப்பது!

பிறத்தலும் இறத்தலுமாய்
ஆகிறது
இணைதலும் பிரிதலும்...

நுண்ணிய எல்லைகளில்
உடைதலின் சாத்தியங்கள்
இருப்பினும் நம்பகத்தின் நீட்சியே அன்பு

உறவென்பது இன்மையைத் தூய்மையாய்
துணிவாய்
ஒப்புக்கொண்ட
உடன்பாடு

உடனிருப்பு
பிரிவை அறியாமலல்ல,
அதனை மௌனமாக ஏற்றுக்கொண்டு
பேரன்பு செய்யவே....!!!

## பேரழகு

மரங்களின் அடர்பசுமை
மனம் வருடும் வயலோரக் காற்று

சிற்றோடை சிலிர்த்து நடனிக்கும்
சலசலக்கும் நீர் மெதுவாய்ச் சிரிக்கும்

சின்னத்தும்பிகளின் ரீங்காரம்

சிறகசைக்கும் பட்டாம்பூச்சிகளின்
சிருங்காரம்

புல்லின் பச்சைத்தரை
புள்ளினம் பரவசம் வானில்

பனித்துளியீரம் போர்த்தும் பூமி
பேரமைதியில் மூழ்கும் உலகம்

ஒரு மெல்லிய நகர்வில்...
ஒரு மெல்லிய தாளத்தில்..
தியானித்து இயங்கும் சூழல்

ஆசுவாச உணர்வு
ஆழ்மௌன நெகிழ்வு


மிகப்புனிதமாய் இயற்கை
மிகவும் மென்மையாய் அதன் மூச்சு

தன்னியல்பின் பேரழகு
இவ்வுலகு
மனிதர்கள் இல்லாத போது!!

## கதைகள் பரிதாபங்கள்

நீ பார்க்கவில்லையதனால்
சுருங்கி விட்டது
என்னிதயம்

நீ பார்த்து விட்டாய்
இப்போது கொஞ்சம்
நிம்மதி...
ஆனாலும்,
இதயங்கள் இல்லாததில்
இன்னும் சுருங்கி விட்டது
இதயம்



முயற்சியில்
சற்றும் சளைக்காத
விக்கிரமாதித்தனாய் நான்...
அடுத்ததைப் பதிகிறேன்
அநாயாசமாய்
காத்திருக்கிறேன்

நிச்சயம் கிடைக்கும்
இதயங்கள்...
நம்பிக்கைதானே வாழ்க்கை!

கதைகள் பரிதாபங்கள்...

- *Dr. ஜலீலா முஸம்மில்,*
ஏறாவூர், இலங்கை.

## தூக்கமில்லா இந்த இரவுக்கு

யாரைக் காரணம் சொல்வதென்றுத்
தெரியாமல் ஒவ்வொருக்
காரணத்தையும் துளாவி
ஒரு காரணத்தைக் கொண்டு
வருவதற்குள் விடிந்துவிட்டது.

இருந்தாலும் காரணத்தைத்
துளாவி வைத்துக் கொள்வோம்.
இன்னொரு இரவையும்
காரணத்தையும் தேடாமல்
நிம்மதியான நித்திரையில்
மூழ்குவதற்காக.

- துங்கன்,
வேப்பூர்.

# குடையும் கொடையும் ஒன்றெனக் கொள்வோம்

பா வகை:
நெடிலடி ஐஞ்சீரிரட்டை இணைநிலைச் சிந்து

குடையும் கொடையும் குணத்தில்
ஒன்றெனக் கொள்வோம்- உலகில்
கொடுத்திடும் நெஞ்சினைக் கொண்டே
உயர்வுடன் வெல்வோம்!

விடையென மாறுமே வியப்புடன்
வாழும் வாழ்க்கையே- உணர்ந்திட
விடியல் சொல்லுமே வெளிச்சம்
யாவிலும் வெற்றியே!

மண்ணில் என்றுமே மாந்தம் சிறக்குமே
அழகாய்- அறிவோம்
மாண்பும் ஓங்கவே மாந்தர் மகிழ்வும்
நிலைக்குமே!

எண்ணம் ஓங்கவே ஏற்றம் ஆகுமே
வாழ்வில்- உணர்வோம்
இயல்பாய் இருந்திடும் எதுவும் உலகில்
இனிக்குமே!

—



வாழ்வியல் கவி,
(சா. நாகூர் பிச்சை)
திண்டுக்கல்.

# உதவி – மனிதத்தின் உயிர்த்துளி

உதவி வெறும் ஒரு சேவையல்ல - அது
மனிதனின் இரத்தத்தில் ஓட வேண்டிய
சிவப்பு இரத்தத் துளிகள்!

உதவி என்பது பொருள் கொடுத்து நன்றி
பெறுவதல்ல - அது
ஒரு மனிதனை வாழ வைக்கச் செய்யும்
தங்கப் பணிகள்!

உதவியை மறுத்தால் தாயை வெறுப்பது
போல!
உதவியை செய்யேல் தந்தையை
அவமதிப்பதுப் போல!



உதவியின் ஒவ்வொறு
இதழும், ஒரு மனிதனின்
உடல் உறுப்புப் போல!

உதவி ஒருவன்
செய்யாவிட்டால், அவன்
உடலில் உறுப்புகள் இல்லாதது போல!

உதவியை செய்யேல் அவன் வெறும்
தோலும் எலும்பும் தான்!

உதவியை செய்தால் அவன் என்றும் ஒரு
நல்ல வாழ்க்கை பெறுவான்.

- செ. ஹரிதா,
7ஆம் வகுப்பு, ஸ்ரீ பாரதி வித்யாலயா,
மன்னார்குடி.

# ஒடுக்கப்பட்ட மக்கள்...

"என்ன ஆச்சு இந்த அப்பாவுக்கு, நூறு வாட்டி கைப்பேசியில் அழைத்து பார்த்திட்டேன், நானே ரெண்டு மாசத்துக்கு ஒரு வாட்டிதான் தொலைப்பேசியில் அழைத்து விசாரிக்கிறேன். அப்படி இங்க வீட்டில் இருந்து வேலை என்றாலும், வேலை எனக்கு நெட்டித்தள்ளுதாம். அபூர்வமாய் நான் அழைத்தாலும் செய்தால் அதையும் வர வர அப்பா எடுப்பதே இல்லை. அப்படி என்னதான் வெட்டி முறிக்கிறாரோ அந்த குக்கிராமத்துல?" என்று தன் கைபேசியை கோபமாய் கீழே தரைவிரிப்பு மீது வீசி எறிந்தான் ராஜதுரை.

அவன் கோபத்துக்கு இன்னொரு காரணம் சென்னையில் கூடப் படித்த திவாகரன் புதிதாய் ஒரு தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தை ஆரம்பித்திருக்கிறானாம். வணிக கூட்டாளியாக நீயும் சேர்ந்து கொள். திருவான்மியூரில் பெரிய கட்டிடத்தை அலுவலகத்திற்கு பார்த்து விட்டேன். உன் மகத்தான மூளையின் உதவியால் விரைவில் நிறுவனத்தை உயர்த்திவிடலாம் என நம்பறேன். எப்போது இந்தியா வருகிறாய் நண்பனே? எனக்கேட்டு ஒரு மின் அஞ்சல் அனுப்பியது தான்.

"இவனுக்கு வேற வேலை இல்லை. டாலர் சம்பாத்தியம் அங்கே கிடைக்குமா என்ன? மேலும் அமெரிக்கா ஒரு சொர்க்க பூமி! இங்கே முதலில் தண்ணீருக்குக் கடினமில்லை இந்தியாவில் பல இடங்களில் நீருக்கு இன்னமும் கடினம்! என முணுமுணுத்தான். மறுபடி தன் அப்பாவிற்கு அழைக்க கீழே விழுந்திருந்த தன் கைபேசியை எடுத்தான். லாவண்யா அப்போதுதான் காஸ்ட்கோ போய் கழுதை சாணம் கை நிறைய என்பதுபோல சாமான்களை அள்ளிக்கொண்டு வாகனத்தில் இறங்கி வீட்டிற்குள் நுழைந்தாள். அவளைக் கண்டதும் ராஜதுரை," போன வாட்டி இந்தியா போனப்போ கைப்பேசி வாங்கி கைலகொடுத்து" ஒரு அவசரம் ஆத்திரத்துக்கு நான் அமெரிக்காலேருந்து அழைத்தால் செய்தா நீங்க எடுத்துப் பேச உதவியா இருக்கும்னு கொடுத்தால் "வேண்டாம்ப்பா ரங்கதுரை.

தொலைப்பேசி ஒண்ணு போதும் நான் நேசிக்கிற இந்த கிராமம் நீரனூரை விட்டு நான் எங்கயும் போகமாட்டேன். என் உயிரே இந்த மண்ணுலதான் இருக்கு. பேர்ல மட்டும் நீர் இருக்கிற இந்த ஊர்ல தண்ணீர்ப் பஞ்சம் தீரணும் மக்கள் எல்லாரும் தண்ணீருக்கு சிரமப்படாமல் நிம்மதியா இருக்கணும் அதுக்காக என்னால முடிஞ்சதை செய்யணும். எனக்கு அந்த சிந்தனை மட்டும் தான் வேறெ எந்த சிந்தனையுமில்ல 'அப்படீன்னு சொல்லிட்டாரு எங்க அப்பா... இவரு இப்படி ஏதாவது பேசுவாரு ஆனா ஊரு சும்மா இருக்குமா 'பாருடா அமெரிக்கால இருக்கானாம் அப்பனுக்கு ஒரு கைப்பேசி வாங்கித் தரக்கூடாதா'ன்னு வம்பு பேசும். நான் இப்போல்லாம் நீரனூர்ல யார்கிட்டயும் பேசறதே இல்ல. ஒருத்தனையும் லட்சியம் செய்யறதில்ல எல்லா பயல்களுக்கும் நான் அமெரிக்கா

வந்ததுல பொறாமை" என்று கத்தியபடி மீதிருக்கையில் மறுபடி தன் கைப்பேசியை வீசி எறிந்த கணவனைக் கிண்டலாய் பார்த்தாள் லாவண்யா.

"அறுபது வயசுக்கு உங்கப்பாவுக்கு மூளை ரொம்பவே கெட்டுப் போயிட்டது. அதுவும் அத்தை செத்து போன இந்த ஆறு ஆண்டுல இன்னும் மோசமாயிட்டாரு. ஊரு, என் மக்கள்ன்னுட்டு உளறிக்கிட்டு இருக்காரு ம்ம்" என்றாள் எகத்தாளக் குரலில்...

"ஆமாம். ஆனா ஊருக்குள்ள நான் நுழைஞ்சா எல்லாரும் என்னைத்தான் என்னவோ குத்தவாளியா பாக்கிறாங்க. என்னவோ நான் இந்த மனுசனை தனியே தவிக்கவிட்ட மாதிரி... இங்கயும் வரமாட்டாராம்... சொன்னா கேட்டாத்தானே பிடிவாதம் அதிகம் எங்கப்பாக்கு"

"உங்களயாவது பாக்க மட்டும் செய்றாங்க ஆனா நாலு ஆண்டு முன்னாடி நான் அத்தை செத்தப்போ ஊர் வந்த போது ஒரு வம்புக்கார கிழவி," ஏண்டிம்மா லாவண்யா! பக்கத்து கிராமத்துல பரம ஏழை வீட்டுப் பொண்ணாயிருந்த உன்னை பரிதாபப்பட்டு பழைய நண்பரோட மகள்னு தன் மருமகளா ஏத்துக்கிட்ட நீரனூர் பள்ளிக்கூட வாத்தியார் ஐயாவையும் அவரு சம்சாரத்தையும் கூட இருந்து கவனிக்காம வெளிநாட்டுக்கு கம்பி நீட்டிடியே என்னவோ விருந்தாளி மாதிரி வந்து அப்பப்போ பாக்கவரியே நியாயமா?ன்னு கேட்டுது. வந்த கோபத்துக்கு கிழவி கன்னத்துல ஓங்கி அறைஞ்சிருப்பேன்... அதான் அதுக்கப்புறம் போனவருசம் நீங்க ஊரு போனப்போ நான் உங்ககூட வரவே இல்ல எங்கப்பா அம்மாவை மட்டும் பார்த்து அவங்களோட மகிழ்ச்சியாக இருந்திட்டு இங்க வந்தேன். வம்புக்கார சனங்க இருக்கற ஊரை என்னவோ உங்கப்பா தான் தலைல தூக்கி வச்சிக்கிறாரு".

"இவரு மட்டும் தேர்தல்ல நின்னா  ஓட்டெல்லாம் இவருக்குத்தான் அப்படி கிராமத்து சனங்களை கைலபோட்டு வச்ருக்கிறாரு. எல்லாரும் 'ஹரி ஐயா ஹரி ஐயா'ன்னு வீட்டு வாசலுக்கு வந்துடறாங்க. அதுலயும் ஒடுக்கப்பட்ட சனங்களோட ரவுசு தாங்கமுடியல.."

லாவண்யா தலையில் அடித்துக் கொண்டாள்.

"சரி விடு. கிழம் நாம சொல்லி கேட்காதே.. ஆமா இந்த அடுக்குமாடி குடியிருப்புக்கு புதுசா ஏதோ தமிழ் குடும்பம் குடிவந்திருக்கு அவங்கவீட்டு குழந்தைக்கு முதல் பிறந்த நாள்னு சொன்னியே?"

"நானும் பிரபுவும் அப்போவே தயாராகி விட்டோம், நீங்கதான் அலுவலகத்தில் இருந்து வந்ததிலிருந்து உங்கப்பாவுக்கு கைப்பேசியில் பேசிக்கொண்டே நேரத்தை கடத்திட்டீங்க புறப்படுங்க சீக்கிரம்".

"அப்பா... சீக்கிரம் வாங்க! நான் விளையாடணும்" என்று ஆறு வயது பிரபு அவசரப்படுத்தவும் அப்பா பற்றிய கவலையை அடியோடு மறந்தே போனான்.

"வாங்க வாங்க!" வாய் நிறைய வரவேற்றனர் புதிதாகக் குடிவந்த அந்த தம்பதியினர். கதவு திறததும் பிறந்த நாள் வாழ்த்து கூறும் பதாகைகளும், வண்ண பாலூன்களும் வீட்டு கூடத்தில் காணப்பட ஏராளமான தமிழ் முகங்கள் தெரிந்தன.

லாவண்யா கால்முட்டியில் ஒட்டை போடப்பட்ட ஜீன்ஸ், 'வி ஆர் ட்வ்ன்ஸ்' என்ற வாசகங்கள் கொண்ட சட்டையுடன், பாப் செய்த தலைமுடிடன் ஆஸ்கார் விருது நிகழ்ச்சிக்கு போகும் வெளிநாடு நடிகை போல வந்திருந்தாள். பிறந்த நாள் கொண்டாட்ட வீட்டுப்பெண் லலிதா பட்டுப் புடவையில் படியவாரிய பின்னலில் குங்குமப் பொட்டில் அசல் தமிழ்ப் பெண்ணாய் காட்சி அளித்தாள்.

"உங்க குடும்பத்துக்காகத் தான் காத்திட்டுருக்கோம் வாங்க உட்காருங்க" என்று லலிதாவின் கணவன் ராஜேந்திரனும் சிரித்தமுகத்துடன் வரவேற்றான்.

"அப்போவே வந்திருப்போம் இவர்தான் அவர் அப்பாக்கு அழைத்து, அவர் அழைப்பை எடுக்கவில்லை என சொல்லி நேரத்தை கடத்திட்டார். ஆமா லலிதா, கேக் வெட்டுவது இனி தானே நடக்கப் போகுது?"

"கேக் வெட்டி கொண்டாடும் வழக்கமில்லை, அதுக்கு பதிலா குழந்தையை விட்டு வழிபாட்டு அறையில புது விளக்கை ஏற்ற வைப்போம். அப்புறம் கொஞ்சம் இறை பாடல் பாடிட்டு எல்லோருக்கும் விருந்து கொடுப்போம்".

"அப்படியா அமெரிக்கா வந்தும் இதென்ன இப்படி ஒரு வழக்கம் ஆச்சர்யமாயிருக்கே?" லலிதா சிரித்தபடி "இந்தியால செய்ததையே தொடர்ந்து செய்யறோம் எங்கே போனாலும் நாம் இந்தியர்னு தானே சொல்லிக்கிறோம் அதனால என்னவோ எங்களுக்கு இதுபிடிச்சிருக்கு" என்றாள்.

லலிதா கூறிய படி அவள் மகன் ஆதித்யா வழிபாட்டு அறையில் புது விளக்கேற்றினான்.

அனைவர் காலிலும் விழுந்து வணங்கினான். அனைவரும் வாயார வாழ்த்த, பிறந்த நாள் நிகழ்ச்சி நடந்து முடிந்து சாப்பாடு ஆரம்பமானது அதுவும் தமிழ்நாட்டு முறையில் இட்லி, வடை, பொங்கல் கலந்த சோறு, அவியல் பாயசம் என்றிருந்தது சில அமெரிக்க குழந்தைகளுக்காக பாஸ்தா ஒரு பாத்திரத்தில் இருந்தது, லாவண்யாவின் மகன் பிரபு அதை சாப்பிட ஆரம்பித்தான்.

லலிதா வந்தவர்களை ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்துவைக்க ஆரம்பித்தாள். தனது தூரத்து உறவினர் என்று இந்தியாலிருந்து நியூயார்க் வந்திருந்த அந்த முப்பது வயது இளைஞனை அறிமுகப்படுத்தினாள்.

"இவன் எனக்கு கூடப் பிறந்த தம்பி மாதிரி பேரு ராம்குமார். இந்த காலத்துல எல்லாப் பையன்களும் படிச்சி பொறியாளர், மருத்துவர், தணிக்கையாளர் ஆக வேண்டும் என்று நினைக்கிறப்போ இவன் பள்ளிக்கூட வாத்தியாரா போக ஆசைப்பட்டு அந்த வேலையில் சேர்ந்திருக்கிறான்.

அதுவும் தஞ்சாவூர் பக்கம் ஒரு குக்கிராமத்துல. இப்போகூட அவன் சொந்த அக்காக்கு பிரசவம் பார்க்க அவன் அம்மா தனியே அமெரிக்கா வர தயங்கினதால துணைக்கு கூட வந்திருக்கிறான். ஒரு வாரத்துல இந்தியா திரும்பிடுவான். ராம்குமார் ரொம்ப சமூக விழிப்புணர்வு உள்ளவன்" என்றாள் பெருமையான குரலில்.

ராம்குமார் வெட்கச் சிரிப்புடன் "அக்கா! இதெல்லாம் ரொம்ப அதிகம். நான் ஏதோ சிறு அளவில் தான் சமூக சேவை செய்துட்டு வரேன். நான் படிச்ச நீரனூர் பள்ளிக் கூட ஹரி ஆசிரியர் பற்றி சொன்னால் நான் ஒண்ணுமே இல்ல" என்றான்.

'ஹரி ஆசிரியர், நீரனூர்' என்றதும் ரங்கதுரைக்கு தூக்கி வாரிப் போட்டது. அதற்குள் லாவண்யா அவன் காதில்," போதும் அவர்தான் உங்கப்பான்னு இங்க சொல்லிக்க வேண்டாம். சேரி மக்களை மாமா வீட்டுக்குள் உக்காரவச்சி கொண்டாடும் அசிங்கம் அமெரிக்கா வரை தெரிய வேண்டாம்" என்று கடுப்புடன் கிசுகிசுத்தாள். ரங்கதுரை மௌனமாய் வேறுபுறம் போய் நின்று கொண்டான்.

"அப்படியா யாரந்த ஹரி ஆசிரியர்?" லலிதா ஆர்வமுடன் ராம்குமாரிடம் கேட்டு விட்டாள்.

"நான் சின்ன வயசில் படிச்ச பள்ளிக் கூட ஆசிரியர், அக்கா! தன்னலமற்ற நல்ல மனிதர். காந்தியவாதி. ரொம்ப எளிமையாவனர், ஏழை எளியமக்களுக்கு வலிய உதவுவார். அவரைப் பார்த்துதான் நான் பள்ளிக் கூட வாத்தியாராகனுமென்கிற லட்சியத்தையும் சமூக சேவை செய்யணும் என்கிற எண்ணத்தையும் வளர்த்துக் கொண்டேன்".

ராம்குமார் முடிக்கும் போது ரங்கதுரை ஏதோ சொல்லவாயெடுத்தான்…

அதைப் புரிந்து கொண்ட லாவண்யா சட்டென அவனிடம் "நம்ம பையன் பிரபு அழற மாதிரி இருக்கே… பசங்களோட விளையாடிட்டு இருக்கான், அடிகிடிபட்டுக்கிட்டானா

போய் பாருங்க" என்று கழுத்தைப் பிடித்து தள்ளாத குறையாக அவனை அனுப்பினாள்.

ரங்கதுரை தயங்கி தயங்கி நகர்ந்தான்.

லலிதா மேலும் ஆர்வமுடன், "ராம்குமார்! ஊர் நாடுன்னு பற்றோடு இருக்கிறது நல்ல மனசுக்கான அடையாளம். கிளைகளும் இலைகளும் கனிகளும் மேலிருந்தாலும் அவைகளுக்கு ஆதாரமாய் இருப்பது பூமிக்குள் வேர் தானே! வேரை மறக்கலாமா? நாங்களே வேற வழி இல்லாம ரெண்டு ஆண்டு ஆதியின் அப்பாக்கு அலுவலகத்துல அனுப்பிட்டாங்களேன்னு அமெரிக்கா வந்துட்டோம். ஆனாலும் எந்த ஊரு போனாலும் நம்ம தாய்நாடு போலாகுமா?" என்றாள்.

லாவண்யா குறுக்கிட்டு, "என்ன இந்தியா போங்க! அரசியல் சரி இல்லை. ஊழல் தலைவிரிச்சாடுது எங்கே பார்த்தாலும் குப்பைக்கூளம். ஏழ்மை. சுத்தமில்லை தூய்மையின்மை. முக்கியமா நீருக்கே பல இடங்களில் திண்டாட்டம்." என்றாள் வெறுப்பான குரலில்.

"நீருக்கு கடினம் சில இடங்களில் என்பது மறுக்க முடியாத உண்மைதான் அதுவும் என் ஆதர்ச குரு ஹரி ஆசிரியரின் நீரனூர் கிராமத்தில் பல ஆண்டுகளாக தண்ணீர் பிரச்சினை. ஊர்க் கோயில் கிணற்றில் ஒடுக்கப்பட்ட மக்கள் போய் குடிநீர் எடுக்க அனுமதி இல்லை. அக்ரகார வீதியிலும் யாரும் அவர்களை வீட்டிற்குள் விடாத போது, ஆசிரியர் தன்னுடைய வீட்டு தோட்டக் கிணற்று நீரினை குடிநீர் எடுக்க பலருக்கு அனுமதி கொடுத்தார் அது ஊரில் பலருக்குக் கோபமாகிவிட்டது. காலம் எவ்வளவு மாறினாலும் சில கிராமத்தில் பழைய நியதிகளை மட்டும் கைவிடமாட்டார்கள் நீரனூரும் அப்படித்தான் ஒரு கட்டத்தில் ஆசிரியரையே வீட்டை விட்டு துரத்திவிட்டார்கள் நாலு மாதமாக அவர் சேரிக்குடி இருப்பில் தங்கினார்.

சிறு அளவில் இருந்த தனது உழவு நிலத்தில் ஆழ்துளை கிணறு போட்டு அங்கிருந்து சிறு மின்விசை நீர்தேக்க தொட்டிக்கு உடனடியாக குழாய்களை அமைத்து நீரை ஏற்றும்படியும், அதன் மூலம் குடிநீர் வினியோகத்தை மேற்கொள்ள முடியும் என்று வட்டார வளர்ச்சி அலுவலரிடம் அனுமதி வாங்கி எல்லாம் சிறப்பா செய்து முடிச்சாராம்... நீரனூர் போகும் போதெல்லாம் ஆசிரியரை பார்க்காமல் வரமாட்டேன் ஆனால் என் அப்பாக்கு சிலகாலம் உடம்பு சரி இல்லாததால் பல மாசம் கழித்து நான் அன்னிக்கு நீரனூர் போனேன்... அங்கே நீருக்குக் கடினம் நீங்கின அந்த ஏழை மக்கள் கண்களில் நீர் பெருகி இருக்கவும் திடுக்கிட்டு விவரம்.

கேட்டேன்... நீருக்கு வழி செய்த நிறைவிலோ என்னவோ குடிநீருடன் சனங்கள் நடப்பதை பார்த்தபடியே கண்ணை மூடினவர் தானாம் அப்புறம் எழுந்திருக்கவே

இல்லையாம். மாரடைப்பு வந்துவிட்டதாம். அதை சொல்லும் போதே எல்லாரும் அழுதார்கள். அவர்கள் எல்லாரும் ஹரி ஆசிரியருக்கு வேண்டியவர்கள் ஒடுக்கப்பட்ட மக்கள்! நானும் அழுதேன். வேறென்ன செய்வது?"

ராம்குமார் நெகிழ்சியான குரலில் முடித்த போது,' அப்...அப்பா' என கேவிக் கொண்டு அங்கே வந்தான் ரங்கதுரை.

கதறிய அவனை பார்த்த ராம்குமார்", நீங்க அவர் மகனா? என்று அவனை மேலும் கீழுமாய் பார்த்தபடி கேட்டான். ரங்கதுரை தலையாட்டினான்.

"ரங்கதுரை! சின்ன வயசில் ஆசிரியர் வீட்ல உங்களைப் பார்த்த நினைவு வருகிறது இப்போது! உண்மையில் உங்கப்பா இறந்த செய்தியை சொல்ல பலர் முயன்றார்களாம். ஆனால் யாரிடமும் உங்கள் இலக்கம் இல்லையாம். ஹரி ஆசிரியர் வீட்டு தொலைபேசியும் வேலை செய்யாமல் இருந்திருக்கிறது. அதை அப்படியே விட்டுவிட்டு அவர் சேரிக்கு வந்திருக்கிறார். ஒடுக்கப்பட்ட மக்களில் ஒருவரே உங்க அப்பாக்கு கொள்ளி வைத்ததாக சொன்னார்கள்.."

"அப்..பா.. அப்பா" கேவி அழுத ரங்கதுரை ஒரு சில நிமிடங்களுக்கு பிறகு சட்டென வாசலை நோக்கி நடந்தான்.

"எங்க போறீங்க?" லாவண்யா கேட்டாள் குழப்பமாக.

"இந்தியாக்கு பயணசீட்டு பதிவு செய்யப் போறேன். அங்கே புதிதாய் என் நண்பன் ஆரம்பிக்கிற நிறுவனத்திற்கு கூட்டாளியாக போகப் போறேன் அப்படியே நீரனூர் மாதிரி எத்தனை கிராமங்கள் நீருக்குக் கடினப்படுகிறதோ அங்கெல்லாம் போய் எங்கப்பா செய்த பணியை தொடர போகிறேன்" என்றான் ரங்கதுரை.

ராம்குமார் அவனை நிறைவோடு பார்த்தான்.

—

மைதிலி நாராயணன் (ஷைலஜா),
மே/பா. ரங்கராஜன். ஆர்,
27/34, கமலம் டி பிரிவு,
டாக்டர் ராதாகிருஷ்ணன் முதன்மை சாலை,
திருவான்மியூர், சென்னை - 41
கைப்பேசி: 9008458256

# துளிப்பா

மூடிய சன்னல்
குழந்தை சிரிப்பில்
கடவுளின் கதவு...

------------

"பல வருடங்களுக்குப்
பிறகு பூட்டியிருந்த
பழைய வீட்டின் முன் நின்றேன்.
கையில் இருந்த
துருப்பிடித்த சாவியை
நுழைத்தபோது, அது
என் இளமைக்கால
நினைவுகளைத் திறந்தது."

பழைய பூட்டு
சத்தம் கேட்டதும்
திறந்தது கடந்த காலம்.

------------

திறக்கப்படா கதவுகள்
தூங்கும் ரகசியங்கள்

------------

எல்லாக் கதவுகளுக்கும் பொருந்தும்...
பணக்காரன் வைத்திருக்கும்
ஒற்றைத் திறவுகோல்.

## தன்முனைக் கவிதை

வெளியே தேடுகிறேன்
உள்ளே தொலைந்ததை
பூட்டும் நானே
திறவுகோலும் நானே

------------

பூட்டப்பட்ட
மன அறைகள்
அதிசயத் திறவுகோலாய்
புத்தகங்கள்...

மௌனம் ஒரு சாவி
நினைவுகளின் பெரும்
கூட்டில் துடிக்குது
என் ஆவி

## பழமொன்ரியு

கையில் திறவுகோல்
பூட்டுக்களின் தேடல்
வாக்குரிமை...

—

ராஜூ ஆரோக்கியசாமி,
1936, மதுராபுரி நகர்,
No . 1, சுங்கச்சாவடி,
பிக்சாண்டார் கோவில் (அ),
மண்ணச்சநல்லூர் (தா),
திருச்சி (மா).

# எழுதியதை

படிக்கத் தெரியாது.
எழுதுகோளிற்கு...
/

வாடிக்கையாளர் வந்ததும்
சில நொடிகள் விடுதலை.
சோதிட கிளிக்கு.
/

என்னைத் தேடிக் திரிகிறேன்.
நானுன் எதிர்ப்படும் தருணம்
என்னை எடுத்து என்னிடம் தா.
/

எங்கும் வியாபித்திருக்கிறேன்.
என்னைப் பாதுகாப்பதும்;
மாசுபடுத்துவதும் உன்பாடு காற்று.
/

முத்து முத்தாய் எழுதுகிறது
வியர்வைக் கவிதைகளை
வெய்யில்.
/

உன்னில் ஒளிந்துக் கொண்ட பிறகு
என்னை எங்கு தேடியும்
அகப்படவில்லை நான்.
/

கிழிசல் ஆடையை
தைத்துக் கொள்கிறது நிலம்.
பலத்தமழை...!
/

கடலெங்கும் மீன்கள்
வலையில் விழும் மீன்களே
உலையில்.
/

ஆறு நிறைய வெள்ளம்
என் தாகம் தணிக்கப் போதும்
ஒரு குவளைநீர்.



—

பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353

# மரங்கொத்தி

நெடுநேரமாய் அந்த
மரங்கொத்தி பறவையை,
தேடிப் பார்த்தேன்,
அந்த மரங்களடர்ந்த காட்டில்
கொஞ்சம் நேரம் கழித்து
சப்தம் கேட்டது,
சென்று பார்த்தேன்,
அது மரங்கொத்தி பறவையல்ல,
மரத்தை வெட்டும் மனிதன்...!

- அ. செல்வராஜ்,
உடுமலைப்பேட்டை,
கைப்பேசி: 9524960630

# அதனாலே...

மகிழ்வானவைகளையும்
வெற்றிகளையும்
வருத்தங்களையும்
தோல்விகளையும்
எதிர்பார்ப்புகளையும்
ஏமாற்றங்களையும்
வாழ்வு பயணத்தில்
சந்தித்து கொண்டே தான்
இருப்பதும்
தவிர்க்க இயலாததும் மனிதனால்

ஆனால் வருகின்ற போது
ஒவ்வொன்றாய்
வாருங்கள்

பெற்ற வெற்றிக்கு
இதற்காக எவ்வளவு
ஆசைப்பட்டோம்
எவ்வளவு உழைப்பு
திறமை காட்டினோம்
என உள்ளுக்குள்ளோ
பகிர்ந்தோ என எண்ணிப்பார்க்க

தோல்வியிலும்
வருத்தத்திலும்
காரணம் அறிந்து
சரி செய்ய

ஒரே நேரத்தில்
வந்தால் அனைத்துக்கும்
ஒரே மாதிரியான
முக்கியத்துவமும்
கொடுக்க முடியாது
எண்ணவும்
யோசிக்கவும் முடியாது..

## அன்றும்...

கருத்து மோதல்
கழுத்து நரம்புகள்
புடைக்க
சத்தம் செய்யும்
வாக்குவாதம் இல்லை

பிடிக்காதவை
பேசப்படும்
பொழுதினில்
உணர்வுகளை
அடக்கி
அமைதி

சோகத்திலும்
இழப்பிலும்
ஏமாற்றத்திலும்
காண்பவரிடத்தில்
பகிரும் புலம்பல்
இல்லை

வெற்றியிலும்
மகிழ்ச்சியிலும்
அறிந்தவர்க்கு
எல்லாம்
ஆர்பாட்டமாய்
வெளிப்படுத்து
இல்லை

என இப்போது
போலவே
அன்றும் இருந்திருக்கலாம்

என எண்ணம் ஒருபுறம்

மறு புறத்தில்
பதிலாய்
வாய்ப்பில்லை

இன்றைய
நிலைக்கு
காரணங்களாய்

இடைப்பட்ட
காலங்களில்
தன் வாழ்விலிருந்து
கிடைத்த
அனுபவம்

பிறரை
உன்னித்து
கற்று கொண்ட
பாடங்கள்

வாசிப்பிலும்
யோசிப்பிலும்
செவி கொடுத்ததிலும்
கிடைத்த
மனப்பக்குவம்

## சற்றே வேறுபட்ட...

இளமையிலும்
மத்திம வயதிலும்
அதற்கு மேலும்
நிகழ்வுகளுக்கான
உணர்வுகள்
சற்றே வேறுபட்டதாய்...

வெற்றி என்றால்
முன்னதில் ஆர்ப்பாட்டம்
பின்னதில் மன நிறைவு

தோல்வி என்றால்
முன்னதில் விரக்தி
பின்னதில் காரணம்
பற்றிய நிதாமான யோசிப்பு

நண்பர்கள்
சேர்ந்தால் கேளிக்கைகள்
பின்னதில்
பழைய நினைவுகள்
பரிமாற்றம்

## மெய்யும் பொய்யும்

பிரச்சனைகள்
என்ற உண்மையால்
தாக்கப்படும் போது

எனக்கு மட்டும்
ஏன் சிரமங்கள்
என்ற பொய்யான
வினா தொடுப்பது

## மௌனம்

பதிலில்லா கேள்விக்கு
உதட்டுமொழி சிக்கலுக்கு

ஆழ்ந்த யோசனையில்
வலுவுள்ளவர்களின் கோபத்தில்

வாசிப்பின் அசைபோடலில்
பேச்சின் உள்வாங்கலில்

இறையிடத்து முறையீட்டில்
எதிர்பாரா முடிவில

## ஒப்புரவறிதல்

சிரமம் பார்த்து
இல்லாமை நோக்கி
பொருளாதாரம் கண்டு
முன்னதன் கணக்கோ
பின்னதின்
யோசிப்போ நீக்கி
இலாப நட்ட
பாவ புண்ணியம்
எண்ணா
உதவலாய்
ஒப்புரவறிதல்

## யார் அவர்?

உள்ளத்தில்
உவகை

அடுத்தவற்றுக்கு
நம்பிக்கை

அங்கீகாரத்தால்
பாராட்டு

பதட்டம் அடங்கி
அமைதி

புதிய இலக்குக்கான
ஆழ்ந்த யோசனை

விளைவாய்
தெளிவு திட்டமிடல்

இத்தனைக்கு
காரணம் யார்

முதல் முயற்சியிலோ
சில முயற்சிக்குப்பின்னான

ஒரே ஒரு
வெற்றி

## இன்னும் பல...

பதவி, படிப்பு
செல்வம், செல்வாக்கு
சமூக அந்தஸ்து தாண்டி

பதவிற்கேற்ற
'பக்குவம்'

செய் தொழிலில்
'நேர்த்தி'

கோப உணர்ச்சியிலும்
'கவன வார்த்தைகள்'

பெற்ற உதவிக்கு
'நியாயம் செய்தல்'

புதியன அறிய
'ஆர்வம்'

மனசாட்சியுடன்
'சுய விமர்சனம்'

என இன்னும் பல

கிடைத்த வாழ்க்கையை
'அர்த்தப்படுத்திக்கொள்ள

## அவசிய உள்ளேன் ஐயாக்கள்...

தோல்வியின்
சோகத்திலும்
'இலக்கை
அடையும்
வைராக்கியம்'

வெற்றியின்
களிப்பிலும்
'இன்னும்
சாதிக்க
தன்முனைப்பு'

அறியாததின்
வருத்தத்திலும்
'கற்றும்
கொள்ளும்
ஆர்வம்'

அவசரத்திலும்
ஆன பதட்டத்திலும்
'செயல்பாட்டுக்கான
நிதான யோசிப்பு'

## ஆற்றங்கரை பொழுதுகள்

வார விடுமுறையில்
சொந்த மண்ணில்
இறையை தரிசித்து விட்டு
ஆலயம் நேர் எதிரே
ஆற்றங்கரை பார்க்கையில்

நினைவுகள் பின்னோக்கி

சாயங்காலம் எப்ப வரும்
பள்ளி நேரம் எப்ப முடியும்
என தோழமைகளோடு
விளையாட ஒடிய பொழுதுகள்

கல்லூரிக் காலங்களில்
படித்த பள்ளி
படிக்கின்ற கல்லூரி
ஆசிரியர்கள்
பார்த்த
பார்க்க இருக்கின்ற
திரைப்படம்
விருப்பமான
கிரிக்கெட் ஆட்டம்
என நட்புகளோடு
நேரக்கணக்கு வைத்து கொள்ளா
உரையாடிய பொழுதுகள்

பின்னர்
செய் பணிக்காய்
முயன்று கொண்டிருந்த
பொழுதுகளில்
வாய்ப்புக்கள்
வளர்த்துக்கொள்ள வேண்டிய தகுதி
அறிந்ததில்
பகிர்ந்ததில்
செவி கொடுத்ததில்
கிடைத்த அனுபவம்
என சளைக்காமால்
நடத்திய தீவிர ஆலோசனை

இதனுடன்
வருமானம் இல்லத்துக்கு
கொடுக்க முடியவில்லை
சோகம் மறக்க
மனதை லேசாக்க
ஊரின் கதாநாயகத்திருவிழாவான
சித்திரை திருவிழாவில்
கலை நிகழ்ச்சி ரசித்தல்
எதிர் மனிதர்கள் மேல்
விமர்சனம்

இன்னும் கொஞ்சம்
காலம் கடந்த பின்
யோசனையை
சொந்தம் கொண்டாட
ஆரம்பித்த பின்
மகிழ்வுக்கு
இழப்புக்கு
வேதனைக்கு
சுய அலசலுக்கு
சிக்கல் விடுவிப்புக்கு
தனிமையில் அமர்ந்த
பொழுதுகள்

இப்போது
அதற்கான வாய்ப்புகளே
இல்லை
அந்த தோழமைகள்
அருகே இல்லை
அமர்ந்து இருக்க
ஆற்றில் மணல் இல்லை

ஏக்கம்
ஆற்றங்கரை நினைவுகளுக்கு மட்டும்
இல்லை
ஆறு இப்படியாகி
விட்டதே என்பதற்கும்
சேர்த்துத்தான்...

## கேள்வியில்

கேள்விக்கு
பதில் தெளிவாய்
சொல்லப்பட்டும்

கேட்டவர்
புரியவில்லை
மீண்டும் சொல்
என்றால்

ஒன்று
பதிலில் கவனம்
இல்லை

இல்லேயெனில்
அவருக்கு விடயம் புதிது
அதை வெளிப்படையாய்
சொல்லாமால்
அறிய முயற்சிக்கிறார்
என்று அர்த்தம்

## வேண்டும்

இன்னும்
தெளிவாய்
திட்டமிட்டிருக்க வேண்டும்

இன்னும்
செயல்பாட்டுக்கு இடையில்
இலக்குகளிடத்தும்
காலக்கெடுவுக்கும்
கவனம் கொடுத்து இருக்க வேண்டும்

இன்னும்
செயல் இடர்ப்பாட்டின் போது
மாற்று வழி பற்றி
யோசித்திருக்க வேண்டும்

இன்னும்
வேலைக்கு தேவையான
பிறரின் செயல்களுக்கான
முனைப்புடன்
பின் தொடர்ந்திருக்க வேண்டும்

என
உண்மையான
சிந்தனைகள்
தோல்விக்கும்
இழப்புக்கும்
பின்னே..

## அன்று சொன்னது எல்லாம்...

அன்று
இல்லத்து உணவில்
தன் விருப்பத்துக்கு
கொஞ்சம் குறைந்தாலும்
ஆர்பாட்டடம் செய்ய
இன்று சரி
நாளை
வெளியூலகத்தில்
நடக்கையில்
என்ன செய்வாய்
என்ற கேள்வியும்

நம்மின்
தவறான
பேச்சுக்கும்
செய்கைக்கும்
ஏன் நாம் சரியாய்
இருந்தும்
இல்லதினரின்
தவறான புரிதலாவும்
வசை மொழி கிடைக்க
மனம் வருந்தி
கண்கள் குளமாக

இதற்கே இப்படி
என்றால்
நாளை
நடைமுறை வாழ்க்கையில்
இதே போல
பலகாண வேண்டியிருக்கும்
என்ற கேள்வியும்

இப்போது
அதை அனுபவிக்கையில்
அந்த கேள்விகள்
நினைவில் வந்து
எவ்வளவு
யதார்த்த வார்த்தைகள்
என்று யோசிக்க
வைக்கிறது...

## உள்ளுக்குள்ளே...

நேற்றைய
நிகழ்வுகளை
இன்றைய
நிஜங்களே
நாளைய
எதிர்பார்ப்புகளை

உள்ளுக்குள்ளே
அசை போடுகையில்

இது நன்றாக
நடந்தது

அப்படி
பேசியிருக்ககூடாது


அது கிடைத்தால்
அருமை

என தனக்குள்ளேயே
பேசிக்கொள்வதும் உண்டு

அந்த கணத்தை
வார்த்தைகள் இல்லா
காட்சிப்படுத்தி
கொள்வதும்
உண்டு...

— *A. S. சுந்தரராஜன்,*
மானாமதுரை.





ஓவியம்:
**மா. நிரல்யா,**
மூன்றாம் வகுப்பு,
சிங்கப்பூர்.



ஓவியம்: **செ. ஹரிதா,**
7ஆம் வகுப்பு, ஸ்ரீ பாரதி வித்யாலயா,
மன்னார்குடி.

# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.